# சென்னைக்காஞ்சி.

இஃது
சென்னையின் முந்நூறாண்டு
நிறைவை முன்னிட்டு
எழுதியது.

இயற்றியவர்
வித்துவான் ரா. கிருஷ்ணமூர்த்தி, பி. ஏ.,
...க்கார் ஹைஸ்கூல்,
...ட்டை.

1249

...ாள் அச்சுக்கூடம்,
...காட்டை.
1939.

பதிப்புரிமை] [விலை 2 அணா

# முன்னுரை.

பிரிட்டிஷ் ஆதிபத்தியம் முதன் முதலில் சென்னையில் இற்றைக்குச் சரியாக முந்நூறாண்டுகளுக்கு முன் தோன்றிற்று. அம் முந்நூறாண்டு விழாவைக் கொண்டாட வேண்டுமென்று சிலர் கருதிய இச்சமயத்தில் என் நண்பர் ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இச்சிறு நூலை எழுதி வெளியிட்டது மிகவும் பொருத்தமானது

இந்நூல் நிலையாமையைக் கூறும் காஞ்சித் திணையில் அதன் நோக்கத்தை இச்சமயத்திற் கேற்றவாறு சற்று மாற்றி நவீன முறையில் எழுதப்பட்டது போற்றத்தக்கதே. வீடு பேறு கருதிக் கூறப்படும் காஞ்சியை விடுதலை பேறு கருதிக் கூறுவதே அம்மாறுதலாகும். காஞ்சியில் நிலையில்லாதனவாகக் கூறப்படும் இளமை, யாக்கை, செல்வம் முதலியவற்றைப்போல் ஈண்டு அரசு, ஆட்சி முதலியனவும் நிலையில்லாதனவென்று கூறப்பட்டுளது. சாதாரணமாகத்

தமிழில் வழங்கும் ஆங்கில மொழிகள் சில இந்நூலில் கையாளப்பட்டிருப்பது இழுக்காகாதென்பது என் கருத்து.

இந்நூலை யான் பெரிதும் விரும்பிப் படித்தேன். தமிழன்பர்களனைவரும் இதைப்படித்து இன்புறவேண்டுமென்பது என் அவா.

**R. C Subramania Iyer**, M. A., L. T.,
*Late Lecturer in Tamil and Pedagogy,*
*Sri Minakshi Oriental Training College,*
***Chidambaram.***

DEVAKOTTAI,
8—7—39.

# ✳ சென்னைக் காஞ்சி

ஞாயிறு நம்பா நாடெனப் பட்டு
மாயிரு புவியில் மாட்சிமைப் பட்ட
செய்ய பகுதிக் கிறையென விளங்கி,
வையம் வியப்ப உலக மக்களில்
ஐந்தினி லொருகூ றடங்கிய பைம்பொற்
செந்திரு வாழும் இந்திய நாட்டிற்
காரு யிரமை லப்பா லுள்ள
விங்கிலாந் தென்னு மோர்சிறு நாட்டில்
அரசாள் மன்னர் ஆரும் ஜார்ஜின்
அரசாங் கத்தீர்! அடியனேன் கூறும்

---

✳ **மதுரைக்காஞ்சி** என்பது மதுரையிடத்து அரசர்க்குக் கூறப்பட்ட காஞ்சி என்பது போல இது சென்னையிடத்துத் தோன்றிய ஏகாதிபத்திய அரசாங் கத்தார்க்குக் கூறப்பட்ட காஞ்சி என்று பொருள்படும். காஞ்சியென்பது வீடு பேறுகருதி கூறப்படுவதாயினும் ஈண்டு விடுதலை பேறு கருதிக் கூறப்படுகிறது, விடுதலை பெறுவது வீடாகையால். புறப் பொருளில் காஞ்சி என்பது பல்வேறு நிலையாமைகளைப் பற்றிக் கூறும் பகுதி.

1. ஆங்கிலத்தில் 'The sun never sets on the British Empire' என்னும் வாக்கியத்தின் உட்கருத்து.

3. செய்ய பகுதி, படத்தில் சிகப்பு நிறத்தால் குறிக்கப்பட்டிருப்பதால்.

அவல வாய்மொழி அன்புடன் கேண்மின்.
அரசும் நில்லா ஆட்சியும் நில்லா
அளப்பரு வான்பெரு செல்வமும் நில்லா
உரோமா புரியின் உரைபெறு நிலையும்
சுமேரியா நாட்டின் பழமையும் பெருமையும்
கிரேக்க மாக்களின் நாட்டாண் முறையும்
எகிப்து மக்களின் ஏற்றமும் எழிலும்
எல்லாந் தேய்ந்துமண் ணாகிய தறிவீர்.
அதனால் யானுமக் குரைக்க வந்தது
சென்னை தன்னில் முந்நூ றாண்டு
முன்புநீர் நட்ட மூவா மொய்ம்புடை
வித்து முளைத்து மரமாய்க் காய்த்து
மூத்துப் பழுத்து முழுமுத லசைந்து
நெக்குவிட் டிரிதரும் நேரம் வாய்த்தது.
இக்குறி தன்னை யறிந்தினி இந்தியர்க்
கீதல் வேண்டும் இந்திய நாட்டை.

---

16. நாட்டாண் முறை - City State Government.

22. வித்து-ஏகாதிபத்திய வித்து.

23. முழுமுதல்-பெரிய அடிமரம்.

24. இரிதரும்-சாயும்.

25-26. இந்திய நாடு இந்தியர்க் குரியது என்னும் கருத்து.

தீதில் வாபணித் தொழில்புரி வதற்கோர்
கடற்றுறைச் சிற்றூர் கருதிக் கெடுவுடன்
கிழக்கிந் தியக்கம் பெனியார் விடுத்த
பிரான்சிஸ் டேவெனும் ஆங்கிலப் பெயரோன்
மசுலையி னின்று மயிலை வந்தான்
முந்நூ றாண்டு முன்ன ரோர்நாள்.
அந்நாட் சென்னையை யாண்டவ னாகிய
பூந்த மல்லி நாயக னன்னார்க்
கோர்நில மருளினன் கடற்கரை யருகு.
புதிதோர் கோட்டை யமைத்தத னுள்ளே
வெகுவா யமர்ந்தனர் வெள்ளை வர்த்தகர்.
இவ்வா றுய வெள்ளையர் குடியயல்
ஒவ்வா நிறத்த கரியர் குடிதனைப்
பிளாக்டவு னெனுமோர் பெயர்படைத்திருத்திப்
பிரஞ்சுப் பகைஞர் அதனை யழிக்கப்
பின்னுமோர் பிளாக்டவுன் பிழையறக் கட்டி

---

27. தீதில்லா வாணிபத்தொழில் புரிய வந்தவர் பிறகு தீதுடைய வேறு தொழில்களிலும் நுழைந்தனர்.

28. கெடுவுடன்-காலவரையறையுடன்.

40. பிளாக்டவுன்-கரியர்குடியிருப்பு.

42. பிழையற, அதாவது மதில்களுடன்; இம் மதில் கட்ட இந்தியர்களிடமிருந்து வரி வசூலிக்க வேண்டு மென்று கம்பெனியார் உத்திரவிட்டதால்,

நற்றுகில் செய்வோர் நற்குடி களுக்கென
நயினியப்ப நாயகன் தெருவும்
சிந்தை களிக்கும் சிந்தாத்ரி பேட்டையும்
காலட் வகுத்த காலடிப் பேட்டையும்
நூற்றொழி லாளரை நூற்று யிரமாய்ச்
சேர்த்ததற் பின்றை, செவ்விய துகிலை
அன்பர் சிந்தைபோ லழுக்கற வெளுக்கும்
சலவைக் காரர் சிலரைக் கொண்ட
வண்ணார் பேட்டை வடபால் வைத்து
வாணிபத் தொழிலை வகைபெற வமைத்து
ஆங்கினி திருந்த அர்மீ னியரையும்
பாங்குடன் பவளமும் வைரமும் பகர்ந்த
பாலஸ தீனத்து யூதமக் களையும்
பாரசி கரையும் போர்த்துகீ சரையும்
விரைவில் விரட்டி, உரைசெல விருந்த
பெரும்படை தன்னால் வாணிபம் பெருக்கி,
கருநா டகநவாப் கருத்துக் கிசையக்
கிளைவெனுஞ் சிறுவனைக் கடும்போர்க் கனுப்பி

---

மதில்வரித்தெரு (Wall tax Road) என்று ஒரு தெருவிற்குப் பெயர் உண்டாயிற்று. அதற்கு அதிக எதிர்ப்பு இருந்ததால், பிறகு அவ்வரி போடப்படவில்லை.

46. காலட்-Governor Collet.

ஆற்காட்டு வெற்றியில் ஆதிக்கம் பெற்று
அன்னோன் அளிக்க வேப்பே ரியையும்
பின்னாள் புரசையும் தண்டையார் பேட்டையும்
மயிலாப் பூரும் நுங்கம் பாக்கமும்
மென்மேல வடைந்து சென்னையைப் பெருக்கித்
திருவீற் றிருந்த திருவல்லிக் கேணியை
ஒருபெயர் வைத்து வாடகைக் குவாங்கி
ஆயிரத் தெண்ணூற் றைம்பத் தைந்தில்
எல்லா வற்றையும் டல்லௌசிப் பிரபுவின்
வார்சுச் சட்ட வலிமையில் பற்றிக்
கருநா டகத்தைக் கவிழ்த்த பின்றை
ஒருகுடை யாட்சியைப் பெரிதும் நாட்டினீர்.
இன்னணம் நீயிர் சென்னையில் நாட்டிப்
பின்னர் நடாத்திய பரிபா லனத்தில்
சென்னைதன் சிறப்பும் வளர்ச்சியும் பெருமையும்
அளவில வடைந்த தனையா னுரைக்கேன்.
முந்நூ றாண்டு முன்னரோர் சிற்றூர்
கடற்கரைக் கண்ண தாகி யிருந்தே
பின்னரோர் பீடுடை பட்டின மாகி
அரசாங் கத்துத் தலைநக ரென்று
உரைசால் சிறப்புடை யுயர்நக ராகி,

---

67. வருஷம் ரூ. 175 வாடகை (Nominal-rent)

70. வார்சுச் சட்டம்-The Doctrine of Lapse

72. ஒருகுடையாட்சி-ஏகாதிபத்தியம்.

கணக்கில மக்கள் கடற்கரை காண
கடலிற் றோன்றிக் குழுமிய காட்சியும்,
இருதலைப் புள்ளி னினியவர் இயங்க
இருமருங் கியன்ற சிறுதூ றுடைய
தாதுசேர் பன்மலர் காதலர் பாதையும்,
இடையிடை யமைந்த இன்னிழல் தரூஉம்
கொடிவீ டுகளும் கோலப் பந்தரும்,
அரங்கும் ஆடலும் வரம்பில் வைப்பும்,
மணிநிரைத் தன்ன மின்விளக் குகளும்,
அணிவகுத் திருந்த அளவில கார்களும்,
திரையூர்ந் துவரும் திண்டிமிற் பரதவர்
கரையிடைக் கவிழ்த்த கணங்கொள் மீனினம்
கொண்டு செலபவர் கூவிடு குரலும்,
உடைதிரை யெழுப்பிய புடைபெய ரோதையும்,
திரையிடை மூழ்குவோர் குறைவில பூசலும்,
முடிவில மோட்டார் இடியுறழ் ஒலியும்,

---

83. கடலின்-கடல்போல

84. இரண்டுதலையும் ஒருடலும் உள்ள பறவை போல் இரண்டுடலும் ஒருயிருமாகியுள்ள காதலர்.

85. சிறுதூறு-சிறுபுதர்கள்.

90. மணிநிரைத்தன்ன-மாணிக்கங்களை வரிசையாய்த்தொங்கவிட்டாற் போன்ற.

91. கார்-மோட்டார் கார்கள்.

92. திண்டிமில் பரதவர்-உறுதியான தோணியையுடைய செம்படவர்.

97. இடியுறழ்-இடிபோன்ற.

இரேடியோக் கருவி கறங்கு மிசையும்,
இந்துமெயில் மித்திரன் விகடனெனப் பகர்ந்து
தொந்தரைசெய் சிறுவர்த மந்தமில ஓசையும்
[illegible]துகக் கொங்கையர் கல்லூரி நீங்குபு
எந்திரச் சிலையை யெழில்பெற வணிந்து
கைபுனை யொப்பனை காண்வர வியற்றி
காதலர் தம்முடன் கைகோத் துலவிக்
கரையிடைக் களிப்பொடு கற்குமோதையும்
விழவுகொள் சிறப்பின் வீங்கின வன்றே.
அயலதோ ரருஞ்சிறை மீற்கென வகுத்ததில்
வட்டமும் முட்டையும் வாளுறழ் வடிவின
குட்டையும் நெட்டையும் குறைவில மீனினம்
பவளமும் பொன்னும் பாணிறம் வெள்ளியும்
பல்வேறு நிறத்த பளிக்கறை படிந்து
பார்ப்போர் பேதுறப் பாயுபு திரிவன
படைப்போன் பெருமையைப் பழுதறக்காட்டிப்
பிடிப்போன் சிறுமையை விளக்கின வன்றே.
ஞாங்கரோர்சிறை நங்கைய ரோதும்
ஓங்கு புகழுடை மேரிகல் லூரியும்,

---

105. கற்குமோதை-புதிய நண்பரிடம் புதியன பேசலால்.

107. மீற்கு-மீனுக்கு.

111. நிறத்த-நிறத்தையுடையன.

115. ஞாங்கர்-முன், இனி.

லீங்கு பனித்திரள் வீடென் றேதும்
திங்க ளன்ன நங்கைய ரில்லமும்,
புல்லரை நல்லா ராக்கிப் புகழ்பெறு
பல்கலைக் கழகத்தின் பரீக்ஷைக் கூடமும்,
எத்தே யத்தரும் இத்தே யத்தருக்
கெதிர்நிலா தவர்தங் கிரிக்கட்டு மட்டையை
விட்டே யோடிடு விளையாட்டு மன்றமும்,
மாணவர் மெச்சிடு மாகணக் கலூரியும்,
ஆற்கா டுநவா பமைவுற விருந்த
அணிநல மிகவுடை யாண்மனை யிடமும்,
கலைவளர்ப் பாளர் கூடியா ராயும்
நிலவறை பலவுடை கல்விமண் டபமும்,
மன்னுயிர் கண்பெறக் கல்வி யளித்திடுஞ்
சென்னைப் பல்கலைக் கழக நிலையமும்,
புதியவும் பழையவும் பாரினி லுளபல
பன்னூற் றொகுதியைப் பாங்குற வடுக்கிச்
சித்தரும் சிலகலை யாண்டுப் பயில
மெத்தவு மனங்கொள மாண்புட னமைத்த

117. Ice house.
118. வடிவாலும் நிறத்தாலும் பிறவற்றாலும் திங்களைப் போன்றது.
124. Presidency College.
128. Senate House.
130. Madras University Buildings.

வித்தகர் புகழ்ந்திடு புத்தக நிலையமும்,
இத்திற முடையத னொருசிறைத் தமிழுடன்
பற்பல கலைகளைக் கடிதா ராய்பவர்
பொற்புற வீற்றிருந் தொளிபரப் புநரும்,
மற்றத னயலதோர் மாடுகள் படிந்திடும்
சிற்றறி வுடையவர் சினவுங் கூவமும்,
பெரும்போ ரதனில் அரும்பெற லுயிர்தனைத்
துரும்பென மதித்துத் துறக்கமெய் தியர்க்கென
நடுகல் நட்டுள நலமிகு வட்டமும்,
கடுமுரண் காவலுங் கிடங்கும் மதிலும்
நெடுமுகில் தொடுமள வுயர்ந்த கொடியும்
இனைத்தென வறியாத் தனிப்பெரும் படையும்
உடையதோ ரரணது முந்நூ றாண்டுமுன்
அடிகோ லியதிங் காங்கில ராட்சிக்
கதனு ளிருப்பன வாலோ சனைமிகு
அமைச்ச ரறைகளும் ஆலோ சனைசொலுஞ்
சட்ட சபைகளுங் காரியா லயங்களும்
மட்டில் வலியுடை வெள்ளையர் குடிகளும்.
அருகி லிருப்பதோ ரதிசய மதிசயம்;
உருவில ஒலியலை கரித்தடை முன்னர்

---

135. The University Library.
140. இகழ்ச்சிக் குறிப்பு (ironical)
143. War memorial.
154. உருவில-உருவில்லாதனவாகிய; கரித்தடை கரியினால் செய்யப்பட்ட ஒரு தடை (microphone)

உண்டா யிடினே யசைவுற வதனுடன்
இருகம் பியினா லிணைக்கப் பட்டதோர்
மின்சா ரத்தொடர் மிகுவே கத்துடன்
அசைவுறு மின்னியற் காந்த வலைகளைக்
காற்றி லுகுத்திட மனவே கமதாய்
மற்றவை சென்றொரு ககனக் கம்பியி
னீர்க்கப் பட்டொரு மின்றொட ருட்புகச்
சீர்பெற் றாங்குள கேட்கும் கருவியில்
ஒலிபெற் றுதித்திடும் "ஒயர்லெஸ்" பெயரது
எந்நா டாயினு நந்நா டாக்கிடும்
எங்கார் பேசினு மிங்கே வீசிடும்
ஈதனா லுற்றிடு மின்பமே யாதினும்
ஓதலாந் தகையதாம் ஈதலா தண்டையில்
காதநான் கறிந்திடுங் கலங்கரை விளக்கங்
கலையுடை பரிதியிற் கலைகளை வீசிக்

---

155. அசைவுற-அக்கரித்தடையசைய(Vibrates)
157 மின்சாரத் தொடர்-electric circuit.
158. Oscillating electro-magnetic waves
160. ககனக்கம்பி, aerial,
162. சீர்பெற்று, being rectified; கேட்கும் கருவி, receiver.
163. wireless, இதுவும் ரேடியோவும் ஏறக்குறைய ஒரே வேலைப்பாடுடையன.
169. பரிதியின்-சூரியனைப்போல.

காண்போர்த் தகைக்கு மதன்மிசை நின்று
கீழ்ப்புறங் காணின் கருங்கடல் நம்மைக்
கடுகி வளைப்ப வதனிடை யன்ன
அமர்ந்துவந் தணுகுவ போன்றுநம் மருகு
சேர்ந்திடுங் கலங்களின் சேணுறு காட்சியும்,
ஊர்ப்புறம் நோக்கிடின் உயர்பல மாளிகை
கார்பரந் ததுவெனக் காணு மங்கியும்
ஈப்பறந் ததுவெனக் கார்பறப் பனவும்
அரண்மனைத் தெருவின் முரண்படு கட்டிடம்
இரணியக் கலசங் கவிழ்த்தபோற் காணும்
தொழிலுலை புகைவன எரிமலை யெனவும்
தொடர்வண் டியூர்வன மரவட் டையேய்ப்பவும்
மின்டிராம் வண்டிகள் பல்சா ரோடுவ
வெருவிய பூசை வால்நிமிர்த் தெனவும்
வான வூர்தி வட்டமிட் டலைவதும்

---

170 தகைக்கும்-தடுக்கும்.

171. கீழ்ப்புறம்-கிழக்கே.

174. கலங்கள்-வெண்ணிற முடைய நீராவிக் கப்பல்கள்.

176. கார்-மேகம்.

177. கார்-மோட்டார் கார்.

180. தொழிலுலை-தொழிற்சாலைகளின் உலைகள்.

181. தொடர்வண்டி-train.

182. மின்டிராம்-electric trams.

184. வானவூர்தி, aeroplanes.

இன்னவை பிறவு மினியகண் டிழிந்து,
பன்னருஞ் சிறப்புயர் நீதிமன் றத்தினுட்
சென்றவண் நின்றதோர் நீதிபதி சிலையையும்
மயன்விதித் தன்னவம் மன்றத்து மாட்சியும்
ஈரிரு கையுடை யிருஞ்சட் டையணிந்
தோருயர் கைதனை யோங்கிப் பலகைமீ
திடித்துக் கடுத்து இறைந்து கூவியே
நியாயவா தஞ்செயும் நியாயவா திகளிடை
ஒருபே ராதனந் தனிலினி தமர்ந்து
ஒருபாற் கோடாக் கொள்கையொ டிருந்த
பெரும் புகழ் நீதிபதி நிலைஇய காட்சியும்,
அருகினி லுளதோர் சிறுவழக் குமன்றமும்,
நீதிநூற் கற்பவர் பயிலுமோர் பள்ளியும்,
சினப் பசாரிடை மேனாட்டுப் பதுமைக
ளூன்றடி யன்னவும் தேங்குழவி யன்னவும்
சூடத் தியன்றன செந்நிறந் தன்னுடன்
கண்கவர் வனப்பின காண்பினிது விளங்க,
அல்லங் காடியி லாயிரவ ரவணவண்
பல்பெரும் பண்டம் பகர்ந்துசெய் யோசையும்

---

189. இருஞ்சட்டை, கரிய (பெரிய) சட்டை.
196. Small Causes Court.
197. Law College.
199. ஊன்றடி-கருப்பத்திறந்த குழந்தை.
202. அல்லங்காடி-evening bazaar.

மோட்டார் முழக்கமும் மின்டிராம் மணியொடு
சைக்கிலின் சத்தமும் சட்காச் சகடத்திற்
சவுக்குற் றெழுப்பிய சடபட வெனோசையும்,
இடியென மழையென விவையெழுந் தொலிப்பபோல்
வெடிபட முழங்குமிவ் வோசையோர் பக்கலும்,
கண்கொடுத் தும்பெறுந் தகவுடை யனபல
கட்டிடங் கவின்பெறக் காண்போர்ப் பிணிப்பவும்
தொலைப்பேசி தொலையெழுதி யென்றிரு நிலையமும்
பச்சையப் பனார்பெயர் பெற்றினிது விளங்கு
மெச்சரு கலூரியும், பிரப்பங் கடையினில்
இறப்பவுங் கலிங்கம் கதரினும் பட்டினும்
கண்பறிக் கும்வகை காதிவஸ்த் ராலயத்
தயல்நாட் டாடையி னணிமிகுந் திருப்பதும்,
சீனமும் ஜாப்பனும் இங்கிலாந் தின்பல
இனியநூ லாடையொ டிந்திய வாடையை
இருபுற மிரீஇய வணங்குபோற் பாவைமீ
துடீஇ யமைவுற வமைப்போற் சமைத்த
அறுவையங் காடிக ளமைந்தபே ரழகும்,
பச்சையும் நீலமும் பாணிறம் பவளமும்
பற்பல விளக்குக ளெப்புற முமொளிர

---

205–6. ஜட்கா ஓட்டுபவர் வண்டிச் சக்கரத்தில் சவுக்குக் கம்பை நுழைத்து ஓசை கிளப்புவர்.

211. Telephone and Telegraph.

214. இறப்பவும்-மிகவும்.

எதிர்பவ ரொளிமயக் குறாஉந் தகையவாய்
விளங்கித் தோன்றும் விசித்திரக் காட்சியும்
மங்குறோய் மாளிகை மண்டி நீடிய
தங்கசா லைத்தெரு பொங்குபே ரழகும்,
மருத்துவங் கற்போர் மாபெரும் பள்ளியும்,
மன்னுயிர் மாயா மரபின வாக்கி
இன்னுயிர் தந்து இசைகொண் டோங்குஞ்
சென்னைச் சருவ சிகிச்சைச் சாலையும்,
சென்ட்ரல் ஸ்டேஷனின் செயிரறு மாட்சியும்,
அளவில மக்க ளார்வ முடனங்
கரிய பெரியரை வரவேற் றுவகையோ
டெதிர்கொண் டழைத்து இறைக்கு மோதையும்
பிரிவோர் தம்மைப் பண்டியி லேற்றிப்
பரிவுடன் வினவிப் புறப்படும் வண்டியை
விருப்புட னனுப்ப விசில்போற் பயிற்றி
கையும் குடையும் கைக்குட் டைகளும்
வீசி வீசி விடையளிப் போர்தம்
வீறிடு குரலுடன் வான்பிளந் திடுமென
வண்டிகள் கூவிடும் வன்குரன் முழக்கமும்,

---

224. ஒளிமயக்குறாஉம்-ஒளியால் மயக்கமடையும்
228. Medical College.
231. Madras General Hospital.
238. விசில், whistle.

தவறிடும்வண்டியென் றறைந்துகொண்டொல்லெனத்
தலைகீழ் வேகமாய்க் கைதனிற் பெட்டியும்
கக்கத்துப் படுக்கையும் கொண்டதிற் கடிதிற்
றாவிப் பாய்வோர் தகவில வோசையும்,
ஊர்புகு மவரை நேர்கொண் டழைக்கும்
வண்டிக் காரரின் வரட்டு ஒலியுடன்
வரிசையா யாங்கு வகைபெற வமைத்த
வாடகை மோட்டார் வலவரு மவரை
வாம்வா மென்று வரவேற் றொலிப்பதும்,
என்றுங் கின்ன வியல்புட னமைந்த
நன்றுகு நிலையத் தெதிரெதி ரோடும்
குன்றுப் புகழுடை மின்டிராம் வண்டிகள்
சன்னற் பலவுடை சிறுமா ளிகைக
ளுயிர்பெற் றார்ந்தென வுலவுங் காட்சியொ
டழுகுபுனற் பாயும் அழகிய கூவமும்
அதன்மே லமர்ந்த ஸ்டான்லிப் பாலமும்

---

243. ஒல்லென-விரைவுக் குறிப்பு (அநுகரண ஓசை).

250. வலவர்-drivers.

251. வாம்வாம்- அநுகரண ஓசை; அல்லது வாரும் வாரும் என்பதன் தொகுத்தல் விகாரம்.

253. நிலையம்-station.

255. சன்னல்-ஜன்னல்.

257. அழகியது, ஏனெனின் அதன்மீது காணும் இனிய காட்சிகளால்.

சீரியர் செல்லா மூர்மார்க் கெட்டும்
விக்டோ ரியாப்பேர் பொதுமண் டபமும்
மக்கட் பிரதிநிதி யாகி நிற்போர்
அப்பன் எனத்தகு மொப்புடன் கூடிடும்
ரிப்பன் பெயரிய கட்டிடத் தொகுதியும்,
வெண்காற் கமுகு விண்ணுற வளர்ந்த
பண்படு மினிய பீபில்ஸ் பார்க்கிடை
கண்படுந் தகைய கவின்பெறு பூம்புதர்
களிமயி லெனவுங் களிற்றின மெனவும்
வயப்புலி யெனவும் வாம்பரி யெனவும்,
கவிழ் குடமெனவுங் கிரீட மெனவும்,
பாற்பெற வகுத்த பண்புடைப் பீடும்,
அம்பி யியக்குநர்க் கமைந்தபே ரகமும்
நீந்தித் திளைப்பவர்க் கோங்குநீர் நிலையும்,
பல்வேறு பயிற்சி பாங்குறப் பயின்று
மல்லேறு தோளர் மாண்புறப் பழகும்
தென்னிந் தியருடற் பயிற்சிக் கழகமும்,
கானத் தியங்குங் கரடியும் புலியும்

---

259. ஏனெனின் நகரத்து மக்கள் அங்குச் செல்லாது நாட்டுப்புற மக்களே அதிகமாகச் செல்லுதலாலும், விலை வாசிகள் உயர்ந்திருத்தலாலும், கசாப்புக் கடைகளின் மிகுதியாலும்.

262. அப்பன்-ஆங்கிலத்தில் city fathers என்னும் வழக்குப் பற்றி.

275. South Indian Athletic Association.

மீனொத் தலர்ந்த பொறியுடை கலையும்
சிறுத்தையுஞ் சிங்கமும் கருத்த மந்தியும்
சிவந்த பீடத் துயர்ந்த முசுவும்
மனிதக் குரங்கு மாண்புடை கொரிலா
ஊராங்கு டாங்கெனு மூகப் பகுதியும்
ஒட்டையும் யானையும் ஓங்குபற் புரவியும்
ஆப்ரிகா நாட்டு அணங்குடை யரியும்
ஒட்டைச் சிவிங்கியும் பட்டைக் குதிரையும்
நெருப்புக் கோழியும் பழுப்புக் காடியும்
சார்வோர் தம்மைச் சாடுவ போன்று
செறுத்த நோக்கிற் சென்றுமீ ளுனவும்,
மயிலினங் களொடு மாடப் புருவும்
பஞ்சுபோ லன்னமும் அஞ்சுநிறக் கிளியும்
பயிற்றி விளிக்கும் பல்வேறு புள்ளும்
பாப்பினம் பலவுடன் பதுங்கு முதலையும்
சேக்கும் ' சூ ' வெனும் செயிர்தீர்ச் சோலையும்,
மவுண்ட்ரோ டென்னு மாபெரு மறுகில்
மாண்புற வமைந்து மயக்குறுந் தகையதாய்
வருநர்க் கடைத்த தாப்புடை வாயிலொ

---

284. பட்டைக்குதிரை-வரிக்குதிரை (zebra)

289. அஞ்சுநிறம்-பஞ்சவர்ணம்.

292. சேக்கும் சூ-தங்கும் மிருகக்காட்சிசாலை(Zoo)

295, வருநர்க்கடையா வாயில் என்பது பழைய வழக்கு.

டெப்புற நோக்கினும் புற்புத ரல்லது
மன்னுயிர் நாற்ற மின்மையே மாண்பெனக்
கொண்ட கொள்கையொ டமைந்த பண்புடை
மேன்மை தங்கிய கவர்னர்மா ளிகையும்,
அடிசன் ஸ்பென்ஸர் ஆர்ப சாட்டோ
ரென்பெனட் ஓயிடவே ஜீயீ சியெனு
மங்கிய ரமைத்த அந்தமில் கடைகள்
அள்ளும் பொருளால் கொள்ளைக் கூட
மெனலாந் தகையவா யெவ்வழி னோக்கினு
மவ்வழி னீர்க்கும் அணிபெறத் திகழ
மக்கள் மலிந்து மண்டிய மரபால்
செக்குள் சிக்கிய சரக்கெனச் சுழன்று
திக்குத் தெரியா துழலுமங் காடியும்,
மாய விளக்கின் விளம்பரக் காட்சியொ
டுயிருடை யனவு முணர்வுடை யனவுஞ்
சித்திர மாகித் திரையிற் படிந்து
சலிக்கும் படங்களும் ஒலிக்கும் படங்களுங்
காண்போர் குழுமிய காட்சிக் கூடமும்,
அறியா மையி லழுந்திக் கிடக்கும்
கட்குடிக் காரர் கொடுக்குங் காசைக்
கைவிடு வோமென் றுறுதி கொண்ட

---

309. மாயவிளக்கு-Magic Lantern.
312. Movies and Talkies.

மக்கட் சர்க்கார் மதுவொழித் திடுமென
மையல் கொண்டு மதுவை மாந்தி
மாதிர மறியா மம்மர் தன்னால்
மக்கள் மனைவியர் தம்மொடுங் கூடி
கக்கந் தன்னில் கட்கலத் துடனே
கைசோர்ந் துறங்கும் பெல்ஸ்ரோட் பண்பும்,
பைகிராப்ட்ஸ் தெருவில் பல்லா யிரவர்
கடலிடை புகுஉம் நதியெனத் திரண்டு
படுசுட ரமையம் பார்த்திருந் தொருங்கு
கடற்கரை நாடிச் செல்லுந் தோற்றமும்,
பழம்பொருள் பல்கிய எழும்பூர்ச் சாலையில்
காண்போர் காட்சிக் கெளிதா யமைந்த
மாண்டோ ரடைக்கும் மிடாவும் தாழியும்
மிடைகொள வீண்டிய கடவுளர் சிலையும்
கல்வெட் டுகளும் செப்பே டுகளும்
வில்வேல் வாளு மவற்றின் வகையொடு
கணிச்சி குந்தம் சூல மங்குசம்

---

318. மையல், உன்மத்தம்; அதன் மீது மையல்.

319. மாதிரம்-திசை. மம்மர்-மயக்கம்

327. சாலை-Museum.

329. பழைய காலத்தில் இறந்தவர்களை அடைக்கும் பெரியமட்பாண்டங்கள்.

330. நெருங்கித்திரண்ட.

கேடயங் கோடே துடியொடு பறையே
கவசங் கழுவே காவற் கூடே
கடும்பீ ரங்கியொ டிடிக்குந் துபாக்கி
யெனவிவை மாண்ட சரித்திரப் பகுதியும்
பஞ்சலோ கத்துப் பன்னூ றுருவும்
பல்வே றுலோகத் தியன்ற பணிகளுந்
தந்தத் தியன்றன தகைபெறு தொழிலும்
தச்சன் கைவினைப் பொலிந்த தூண்களும்
விலையுயர் நிலைகளும் நீள்கத வங்களுஞ்
சித்திரத் தொழிலமை பெட்டியும் பதுமையும்
கைத்தறி நெசவுங் காண்டகு புட்டிலொ
டித்திறத்தியன்றன கைத்தொழிற் பகுதியும்
இப்புவி தன்னி லகப்படு பொருளாம்
முத்தும் பவளமுங் காமரு மணியும்
பற்பல கல்லும் பாறையின் விகற்பமும்
மாறுபடு மண்ணும் மணலின் கூறும்
பார்நூ லாளர் பாரித் தனவொடு

---

335. காவற்கூடு-கைதிகளை யடைக்கும் இரும்புக் கூடு.

337. மாண்ட-மாட்சிமைப்பட்ட.
344. புட்டில்-கூடைகள்.
348. விகற்பம்-வகை (Varieties).
349. மண், மணல் இவற்றின் பாகுபாடுகளும்.
350. பார்நூலாளர்-Geologists.

மரநூ லாளர் மாய்த்தபன் மரங்களுஞ்
செடிகளுங் கொடிகளுந் தானிய வகைகளு
மவையுறு நோயு மவைதீர் வகையு
மென்றுங் கிவையொடு, பொன்றிய பல்லுயிர்
பழுதறப் படுத்திய பயந்தரு பகுதியில்
மூவிரு பஃதடி திமிங்கிலத் தென்பும்
மூப்புடை யானையின் முரிந்த உருவும்
மூவீ ரடியுடை யதனுடை கொம்பும்
நரியு மரியும் நஞ்சுடை நாகமும்
பிணைத்த உருவொடு நிலைத்த கவினும்
கொக்கும் நாரையும் பற்பல பறவையும்
உலையா திருக்கு முவப்புடை யெழிலும்
பாப்பினம் பலவொடு பன்னிற மீனினம்
பளிக்குப் பெட்டகத் தமைந்த புதுமையொ
டித்திற மமைந்த காட்சிச் சாலையும்,
காதந் தூரங் கணத்திற் றுவும்
போதகக் குதிரை மீதுதம் பொருளை

---

351. மரநூலாளர்-botanists
354-5. Zoological section
355. பயம்-அச்சம், பய
359-60. ஒருதொடர்.
361-2 ஒருதொடர்.
367. போதகம், இளமை.

THE MADURA TA

பேதை மக்கள் பந்தயங் கூறிப்
பலகாற் போக்கும் பரிவிடு பாதையும்,
மீனம் பாக்க நிலையந் தன்னில்
வான ஊர்தி வட்டமிட் டிழிந்து
வந்திருந் தேகும் வனப்புடை மாட்சியும்,
புழலே ரிதனிற் புனல்நிறைத் ததனை
நகர மக்கள் நன்கனம் பருக
வடித்துக் குழலில் வலித்துச் செலுத்துங்
கீழ்ப்பாக் கத்து நீர்வே லைகளும்,
காலனோர் கைத்தறிக் கெனவந் தமர்ந்த
எந்திரந் தன்னால் எழிலுடை யாடையை
மந்திரந் தன்னால் குவிப்பது போன்று
தந்து குவிக்கும் வெள்ளைய ராலையும்,
மரணக் கவலையை மாற்றி வைக்கும்
மரணச் சேமிப்பு நிதிச்சா லைகளும்,

---

369. பரிவிபொதை-race course.
370. நிலையம்-aerodrome.
373. புழலேரி-Redhills.
375. வலித்து-அமுக்கத்துடன் (under pressure).
376. Kilpauk water works.
380. ஆலை-mills
382. Insurance Companies and Savings Banks.

சங்கநிதி யென்ன பொங்குபொருள் தங்கு
மிந்தியர் பாங்குட னந்நியர் பாங்கும்,
நீரா வியினு லீர்க்கப் பட்டு
நீர்மீ தேகு மூரோ வென்றும்
அடுக்கடுக் காகிய வறையின் றொகுதியொ
டாடு மிடமும் அயரும் பள்ளியும்
விடும் வாசலும் போன்ற வசதியால்
விளங்கித் தோன்றிய வியன்பெரு மாளிகை
யீதோ வென்று மியாவரும் வியப்பத்
தீதறு காட்சி யுடையன வங்கம்
தந்து குவித்த வந்தமில் பொருளும்
கொண்டு செல்லுங் குன்றுறழ் பண்டமும்
நிறைந்து தோன்றுந் துறைமுகந் தன்னொடு
அளப்பி லணிநல முடையவா லிந்நகர்.
எனினு மொன்றுய்த் தறிதி ராயின்

---

384. banks.

392. வங்கம்-நீராவிக்கப்பல்கள்.

393. பொருள் என்பது தொழில் முற்றிய (manufactured) பொருள்களை.

394. பண்டம் என்பது முற்ருத (raw) பொருள்களை.

நிலையிலா விதனை நிலையுள தென்று
மலைவுறு மதியின் மனமகிழ்ந் துற்ற
ஒருகுடை யாட்சியை யொருவி யெமக்கு
நலம்பெறு நாடு நலகுவிர்
நீதியும் நன்மையும் நெறியுமா ரதுவே.

---

398. இதனை-இந்நகரை, எனவே இதன் கண் தோன்றிய உம் இந்திய ஏகாதிபத்திய அரசாட்சியையும்.

399. உற்ற-இவ்விடத்தில் அடைந்த.

400. ஒருவி-நீங்கி.

# பிழைத்திருத்தம்.

| வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|
| 13 | வான்பெரு | வான்பெருஞ் |
| 27 | வாபணித் | வாணிபத் |
| 48 | பின்றை | பின்றைச் |
| 79 | பீடுடை | பீடுடைப் |
| 86 | பன்மலர் | பன்மலர்க் |
| 169 | கலையுடை | கலையுடைப் |
| 191 | இறைந்து | இரைந்து |
| 235 | இறைக்கு | இரைக்கு |
| 271 | அகமும் | அகழும் |
| 277 | பொறியுடை | பொறியுடைக் |
| 358 | யதனுடை | யதனுடைக் |

குறிப்பு :—

(1-ம் பக்கம்) 5-ம் வரி கருதி கருதிக்

(2-ம் பக்கம்) 4-ம் வரி வரையரை வரையறை

பிரதிகள் கிடைக்குமிடம் :—

**P. S.** அனந்தராஜன்,

59, காந்திபஜார்,

பசவன்குடி,